முதலமைச்சருக்கு எதிரான மனுவை தேர்தல் ஆணையர் திரு. டி. என். சேஷன் விசாரிக்க உயர்நிதி மன்றம் தடையாணை பிறப்பித்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு முக்கிய செய்தியைப் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கியிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர்.

பிற்பகல் 2.15

மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் குறிப்பிட்டுச் சொல்லிய ஒரு பொருள் பற்றிய தொடர்பான கருத்தை இன்று இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நேற்று குறிப்பிடுகின்ற பொழுது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீது புகார் மனு ஒன்றைத் தயாரித்து திரு. சுப்பிரமணியசாமி அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களிடத்திலே கொடுத்தார் என்றும் மேதகு ஆளுநர் அதனை தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் செய்தி வந்தது. அது பற்றிய பிரச்சனைகள் எழுப்பப் பட்டன. அதையொட்டி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள், அப்பொழுது நான் இடை மறித்துச் சொல்லுகின்ற போது முறைப்படி, சட்டதிட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள் என்றும் அவற்றை சமாளிக்கின்ற தன்மையோடும். திறமையோடும் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்றும் எடுத்துக் தெரிவித்தேன். அந்த அடிப்படையில் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் ஆணையத்தினுடைய ஆணையராக இருக்கிற திரு. டி.என். சேஷன் அவர்கள் இந்தப் புகார் மனுவை விசாரிக்கக் கூடாது என்று சொல்லி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு இன்றைக்குக் கொடுத்தார்கள். அதற்குக் காரணம் என்ன என்றால் தேர்தல் ஆணையத்தினுடைய ஆணையராக விளங்குகிற திரு. டி.என். சேஷன் அவர்கள் யூ.என்.ஐ. மீது ஒரு மான நஷ்ட வழக்கு ஒரு கோடி ரூபாய்க்கு அவர் தொடுத்து இருக்கிறார். அந்த ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட வழக்கில் திரு. சுப்பிரமணியசாமி அவர்களுடைய துணைவியார் தான் வழக்கறிஞராக இருக்கிறார். ஆக இந்த ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட வழக்கு வெற்றி பெற வேண்டும் என்றால் திரு. சுப்பிரமணியசாமி அவருடைய துணைவியாருடைய முழு தயவும் சேஷனுக்குத் தேவைப்படுகிறது. இந்த நிலையில் ஒரு பாரபட்சம் அற்ற ஒரு தீர்ப்பு வராது என்ற காரணத்தால் அதற்கு ஒரு தடையாணை விதிக்க வேண்டுமென்றும், வழக்கு டி.என் சேஷன்

இடத்தில் செல்லக் கூடாது என்றும் கூறி ரிட் மனுவை மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்தார்கள். சென்னை உயர் நீதி மன்றம் அந்த ரிட் மனுவை எடுத்து இன்று அதன்மேல் நடவடிக்கை எடுத்து தேர்தல் ஆணையம் இதுபற்றி அடுத்து நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று சொல்லி தடையாணை பிறப்பித்திருக்கிறது. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) ரிட் மனுவை அனுமதித்து இந்த வழக்கில் மேல் நடவடிக்கை தொடரக் கூடாது என்று இடைக்காலத் தடை விதித்து இருக்கிறார்கள். உரிய வகையில் உரியவர்களுக்கு முறைப்படி நோட்டீஸ்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வந்திருக்கிற இந்த செய்தியை இந்த அவைக்குத் தொடர்போடு தெரிவிப்பது கடமை என்ற காரணத்தால் இதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல அறிவிப்புக்குப் பின்னால் நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஓரிரு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பரமசிவன் அவர்கள் பேசுகிற போது முக்கியமாக இந்த கலப்பினக் கன்றுகள் வளர்ப்புத் திட்டத்தை தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இது மத்திய அரசால் கொடுக்கப்பட்டு வந்த பணம் நிறுத்தி விட்ட காரணத்தால் இந்த ஆண்டு இல்லையோ என்கிற நிலைமை இருந்தது, இப்போது நம்முடைய அரசு இதை மேற்கொண்டு மாவட்டக் கூட்டுறவு ஒன்றியமும், இணையமும் சேர்ந்து கலப்பினக்கன்றுகள் வளர்க்கின்ற திட்டத்தை சுமார் 1 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற அனைத்து அதிகாரமும் மத்திய அரசுக்கு இருந்தாலும் நமக்கு இருக்கின்ற இந்த குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு துரித நடவடிக்கை எடுத்த காரணத்தால் அகில இந்திய மொத்த விலை குறையீடு எவ்வளவு விலை உயர்ந்து இருக்கிறதோ அதைவிடக் குறைவாகத்தான் தமிழ்நாட்டில் விலை உயர்வு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் அத்தியாவசிய பண்டங்களின் விலை